# விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
# ஆறுபடைவீடு தொழிற் நுட்பக் கல்லூரி மற்றும்
# கலை அறிவியல் கல்லூரிகளின் சார்பில்

## திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம் இரண்டாம் ஆண்டு விழா எம்பவர் 2019 விழாவும் பிப்ரவரித் திங்கள் 02.02.2019 அன்று நடைபெற்றது.




சென்னை விநாயகாமிஷன்ஸ் நிகர்நிலைபல்கலைக் கழகம், ஆறுபடை வீடு தொழிற்நுட்பக் கல்லூரி மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகள் சார்பாக திருக்குறள் செம்மல் மணிமொழியனார் முத்தமிழ் ஆயம் இரண்டாம் ஆண்டு விழாவும், தொழிற்நுட்பக் கல்லூரி “எம்பவர் 2019” விழாவும் சிறப்பாக நடைபெற்றது.



விழாவிற்கு விநாயகாமிஷன்ஸ் வேந்தர் மேதகு டாக்டர் ஏ.எஸ்.கணேசன் அவர்கள் தலைமைதாங்கி உரை நிகழ்த்தினார்.

இயக்குநர் டாக்டர் அனுராதா கணேசன் வரவேற்புரை ஆற்றினார்கள். ஆறுபடை வீடு கல்லூரி தலைமைக் கல்வி அதிகாரி முனைவர் பொன்னவைகோ, உயிர்யியல்புலம் தலைவர் முனைவர் கிரிரங்கசாமி, வாழ்த்துரை வழங்கினார்கள். கவிவேந்தர்.மு.மேத்தா சிறப்புரை ஆற்றினார். கலை மற்றும் அறிவியல் புலம், இயக்குநர் முனைவர் சண்முகவள்ளி ஆண்டறிக்கை வாசித்தார்கள்.

ஆறுபடை வீடு தொழிற்நுட்பக் கல்லூரியின் சார்பில் வெறிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் படித்துவந்த மாணவ-மாணவியர்களுக்க, வேந்தர் ஏ.எஸ்.கணேசன், இயக்குநர் அனுராதா கணேசன், கவிவேந்தர் மு.மேத்தா ஆகியோர் பரிசுவழங்கிப் பாராட்டுத் தெரிவித்தனர். தாய்லாந்து நாட்டிலிருந்து வந்து கல்விகற்கும் மாணவியும் பாராட்டுப் பெற்றார்.

நிறைவாக கலைமாமணி திண்டுக்கல் லியோனி அவர்களின் குழுவினர் பட்டிமன்றம் அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்கவைத்துக் கலகலப் பாக்கியது. விழா நிகழ்வுகளை, கவிஞர் மார்ஷல் முருகன், முனைவர் ஜெயபாரதி, முனைவர் சங்கீதா மற்றும் பேராசிரியர் செந்தில் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

விழா ஏற்பாடுகளை, கல்லூரி முதல்வர் முனைவர் சங்கர், முதன்மைச் செயல்பாட்டுத்துறைத் தலைவர் சீனிவாசன் மற்றும் பேராசிரியர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

ஏராளமான தலைமை ஆசிரியர்கள் பள்ளி முதல்வர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.




திருக்குறள் செம்மல்
ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம்
இரண்டாம் ஆண்டு விழா
02-02-2019


Empower 2019
திருக்குறள் செம்மல்
ந.மணிமொழியனார் முத்தமிழ்


திருக்குறள் செம்மல்
ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம்
இரண்டாம் ஆண்டு விழா
வரவேற்புரை
டாக்டர். அனுராதா கணேசன்
விழாத் தலைமை
டாக்டர். A. S. கணேசன்


AVIT


Empower 2019
One day Programme for
Principals and Teachers of Schools
02-02-2019
AVIT




Empower 2019